**கரைச்சிப் பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கரைச்சிப் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

01 சந்தர்ப்பத்தில் ரூபா 865,325 வருமானம் மற்றும் ரூபா 1,214,986 செலவினங்கள் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

#### 1.3.2. சில்லறைக் கடன் கொடுத்தோர்

2015 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த வேலைகளுக்காக சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 9,848,967 தொகை 2016 ஆம் ஆண்டு வரை வேலை நிறைவேற்றப்படாமல் திரண்டநிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தமையால், இத்தொகையினால் திரண்டநிதிக் கணக்கு அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக சபை தனது கடமைகளை உரிய முறையில் நிறைவேற்றத் தவறியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

#### 1.3.3. பதவியணியினர் கடன்

பதவியணியினர் கடன் மற்றும் முற்பணம் என 08 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த கடன் தொகை தொடர்பில் ரூபா 376,869 தொகையான தவணைக் கட்டணம் மற்றும் வட்டி என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4.உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்துக்கு செலுத்த வேண்டிய கடன்கள்

ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்துக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,274,789 பெறுமதியான கடன் தொகையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஒப்பந்தச் சான்றுகளோ மற்றும் இந் நிதியினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் இந்த மீதி 07 வருடங்களாக நிதிக்கூற்றுகளில் தொடர்ந்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இதனை சீர்செய்வதற்கு சபையினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.5.சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் அத்தியாயம் IX இன் பிரிவு 180 | காசு மற்றும் களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் இலக்கம் 571 | 22 காலம் கடந்த வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 809,597 தொடர்பாக கடந்த இரு வருடங்களுக்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 டிசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 67,364,113 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,948,805 தொகை காணப்பட்டது. நிதி விளைவுகளில் ரூபா 17,415,308 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது.

**2.2. வருமான முகாமைத்துவம்**

**2.2.1. மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்**

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | **2016** | |
|---|---|---|---|
| **விடயம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **உள்ளபடியான வருமானம்** | **31 திசெம்பரில் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரிகள் | 150,000 | - | - |
| குத்தகை, வாடகை | 33,958,960 | 33,096,769 | 4,757,122 |
| உரிமங்கள் | 6,019,700 | 5,705,812 | - |
| வேறு வருமானங்கள் | 71,512,136 | 88,701,095 | 28,968,874 |
| | **111,640,796** | **127,503,676** | **33,725,996** |

**2.2.2. வீத வரிகள்**

1988 பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III இனது விதி இலக்கம் 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டுக்கான ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் வீதவரி அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3. பெறவேண்டிய கணக்குகள்**

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 4,757,122 தொகை பெறுமதியான 20 மீதிகள் மேற்கொள்ளப்பட்டிராது 01 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலப்பகுதிகளில் அறவிடப்படாமல் காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பதவியணி வெற்றிடங்கள்**

சபையினது 17 ஆளணியினருக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.2 சபையினால் நிறைவேற்றப்படாத செயற்திட்டங்கள்**

முன்னைய ஆண்டுகளில் ஆண்டுக்கான பாதீட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 9,848,967 தொகை பெறுமதியான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும் நிறைவேற்றப்படாமல் சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கில் இருந்து திரண்டநிதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

**3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 5,190,000 கயஸ் வாகனம் 17 ஜுலை 2014 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகியிருந்தமை தொடர்பாக எழுந்திருந்த நட்டத்தின் மொத்த பெறுமதி ரூபா 1,214,986 தொகையாகும். இது தொடர்பாக நிதி ஒழுங்குவிதி 104(4) இற்கமைய முறையான விசாரணை முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இது தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 104(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் இவ்வாகனத்திற்கான திருத்தச்செலவு காப்புறுதிக் கம்பனியால் பொறுப்பேற்க மறுத்ததன் பிரகாரம் சபை நிதியில் இருந்து வழங்கப்பட்டமையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையினால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 15,862,880 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டுச் செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 16,006,173 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழ்வரும் விடயங்கள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. அரசிறை நிலுவைகளின் அறவீடு
ii. வாகனங்களின் பயன்படுத்துகை
iii. ஒப்பந்த நிர்வாகம்
iv. அரசிறைப் பதிவேடுகள்
v. ஆளணியினரின் மேற்பார்வை